www.padippakam.com

# தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்

## பின்தள மகாநாட்டு அறிக்கை

(24-7-86 – 1-8-86)

"அனுபவ முதிர்ச்சியின்மை காரணமாகவும், பிற்போக்கு சக்திகளின் அகப்புறத் தாக்கங்கள் காரணமாகவும் நாம் போராட்டக் களத்திலேயே பல்வேறு தவறுகளை விட்டிருக்கின்றோம். தவறுகளுக்கு தத்துவார்த்த முலாம் பூசுவதன் மூலமோ அல்லது அவற்றை நியாயப் படுத்துவதன் மூலமே எங்களை நாங்களே தூய்மைவாதிகளாக காட்டிக் கொள்ள நாங்கள் விரும்பவில்லை. எங்களுடைய தவறுகளை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். அதே சமயம் எங்கள் மீது சுமத்தப்பட்ட ஆதாரப்பூர்வமற்ற குற்றச்சாட்டுக்களையும் கீழ்த்தரமான விமர்சனங்களையும் நாம் நிராகரிக்கின்றோம்"

படிப்பகம்

www.padippakam.com

# தமிழீழ மக்கள் விடுதலைக் கழகப் பின்தள மாநாட்டு அறிக்கை

1970 களில் முதன்மைப்படுத்தப்பட்ட இன ஒடுக்கல் நடவடிக்கைகளால் உருவெடுத்த தன்னெழுச்சியான ஆயுதக் குழுக்கள் 1980 ன் பிற்பாடு எதிரி இன ஒடுக்கல் நடவடிக்கைகளில் இருந்து இன ஒழிப்பு நடவடிக்கைகக்கு வளர்ந்து சென்ற போது தம்மை இயக்க ரீதியான செயற்பாடுகளுக்கு வளர்த்துக் கொண்டன.

குறிப்பாக 1983 ஆகஸ்ட் நடந்த இனக்கலவரமானது பெருமளவு இளைஞர் சக்தியை ஆயுதம் தாங்கிய இந்த இயக்கங்களுக்குள் உந்தித் தள்ளியது. இந்த நிலைமை எதிர்பாராத விதமாக இயக்கங்களின் உள்வாங்கு சக்திக்கு அதிகளவான சுமையை ஏற்படுத்தியது. ஆயுதம் தாங்கிய சிறு குழுக்களுக்கு மட்டும் தலைமை கொடுக்கும் அளவிற்கு வளர்ச்சி பெற்றிருந்த இயக்கத் தலைவர்கள் வரலாற்று நெருக்கடியின் காரணமாக பாரிய இளைஞர் சகதிக்கு தலைமை கொடுக்க வேண்டி-யேற்பட்டது.

தமிழீழ விடுதலைக்காத்தில் உள்ள அனைத்து விடுதலை இயக்கங்களுக்கும் பொதுவான இந்நிகழ்ச்சிப் போக்கைத்தான் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகமும் கொண்டிருந்தது. தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் மார்க்சிய - லெனினிய சித்தாந்தத்தை ஏற்றுக்கொண்ட ஒரு புரட்சிகர ஸ்தாபனமாக தன்னைப் பரினமித்துக் கொண்டாலும் ஆரம்பத்திலேயே இந்தச் சித்தாந்த அடிப்படையிலேயே கட்டமைக்கப்பட்ட இயக்கமல்ல என்பதை இங்கு குறிப்பிட வேண்டும். தேசியவாத, குறுங்குழுவாத செயற்பாடுகளிலிருந்து மார்க்சிச-லெனினிசத்தை நோக்கி பரினமித்து வந்த இந்த இயக்கத்தில் மேற்படி தேசியவாத, குறுங்குழுவாத கண்ணோட்டங்களும், பயங்கரவாதத்தின் எச்ச சொச்சங்களும் தொடர்ந்தும் இருக்கவே செய்தன.

ஸ்தாபனத்திற்கு தலைமை தாங்கிய மற்றும், முன்னணியில் இருந்த தோழர்களிடத்தில் இந்தப் போக்குகள் அதிகமாக குடி கொண்டிருந்ததால், ஸ்தாபனத்தின் சகல மட்டங்களிலும் இந்த தேசியவாத, குறுங்குழுவாத பாதிப்பைக் காணக்கூடியதாக இருந்தது. இதற்கு எதிரான கருத்தியல் ரீதியான உட்கட்சிப் போராட்டமானது சுத்த இராணுவக் கண்ணோட்டப் பார்வையில் மழுங்கடிக்கப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com

அடுத்து ஸ்தாபனத்திற்குள் உதிரிகள் சிறுமுதலாளித்துவசக்திகள், தேசிய முதலாளித்துவ சக்திகள், பாட்டாளி வர்க்க சக்திகள், புத்தி ஜீவிகள் என்கின்ற ஒன்றுக் கொன்று முரண்பட்ட பல்வேறு சக்திகள் ஸ்தாபனத்திற்குள் உள்வாங்கப்பட்டன.

இச்சக்திகள் உள்வாங்கப்பட்டளவுக்கு தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்பதற்கான சரியான வேலைத்திட்ட அடிப் படையில் ஸ்தாபனத்தில் இணைக்கப்படாததாலும், ஸ்தாபன கருத்தியலை ஏற்றுக் கொள்ளும் அளவிற்கு அரசியல் ரீதியாக அணிதிரட்டப்படாமையும், இச்சக்திகளின் அடிப்படை முரண்பாடான வலது, இடது முரண்பாடுகள் ஸ்தாபனத்திற்குள் கருத்தியலுக்கும், கருத்து மறுப்பியலுக்குமாக முரண்பாடுகளைத் தோற்றுவித்தது. ஏற்கனவே குறிப்பிட்டவாறு, தேசியவாத குறுங்குழுவாத பாதிப்புக்களைக் கொண்டிருந்த முன்னணித் தோழர்கள் இம்முரண்பாடுகளைச் சரியாக கையாளத் தவறியதும் சுத்த இராணுவக் கண்ணோட்டம் அணுகுமுறையில் அணுகியதும் ஸ்தாபனத்தை அராஜகப் போக்கிற்கு இட்டுச் சென்றது.

மறுபுறத்தில் ஸ்தாபனத்திற்குள் இருந்த ஆதிக்கச் சக்திகள், தமது சொந்த நலன்களையும் குழு நலன்களையும், வர்க்க நலன்களையும் பாதுகாப்பதற்காக ஸ்தாபனத்தின் தலைமை பற்றிய தனிநபர் வழிபாட்டை மேலிருந்து கீழ் நோக்கி சகல மட்டங்களிலும், உருவாக்கி வளர விட்டனர். இந்த நிகழ்வுகள் ஏற்கனவே முகுந்தன் என்கின்ற தனிநபர் விளம்பரத்தால் உள்வாங்கப்பட்ட இளைஞர் சக்தியை ஸ்தாபனத்தின் செயலதிபராக உள்ள தோழர் முகுந்தனை வணக்கத்திற்குரிய ஒருவர் போன்ற அதி தூய்மைவாதக் கண்ணோட்டத்திற்கு பார்க்க வைத்தது. இது தோழர் முகுந்தனுக்கும், தோழர்களிற்குமான நெருக்கத்தையும், இடைவெளியையும், அதிகரித்தது. இதனைச் சாதகமாக்கிக் கொண்ட குறுங்குழுவாத ஆதிக்க சக்திகள் தலைமைக்கு விசுவாசிகளைப் போல் நடந்து கொண்டு அதிகாரங்களைப் பெற்று தங்களது பொறுப்புக்களையும், நிலைகளையும் நிரந்தரமாக உறுதிப்படுத்திக் கொள்ள முனைந்தனர். இதற்கு இயக்க முரண்பாடுகளே தலைமைக்கு எதிரானவர் என்ற குற்றச்சாட்டையும், தங்களது குறுங்குழுவாத நலன்களுக்கு எதிரான தோழர்கள் மீது சுமத்தி அவர்களை ஒடுக்க முற்பட்டனர்.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் ஆரோக்கியமான ஒரு உட்கட்சிப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய இடது சாரிகள் கூட, தமது சொந்த நலன்களையும் குழு நலன்களையும் வளர்த்துக் கொள்ளும் சந்தர்ப்ப வாதப் போக்கையே கொண்டிருந்தனர். வலது சக்திகளின் ஆதிக்கம்

www.padippakam.com

அதிகாரம் செலுத்த விட்டதும், இடது சக்திகளின் தவறு என்பதைச் சுட்டிக் காட்ட வேண்டும். தேசியவாத, குறுங்குழுவாத நோக்கில் வலது ஆதிக்க சக்திகள் குழுச் சேர்ந்த போது அதே குறுங்குழுவாத நோக்கில் இடது சக்திகளும் குழுச்சேர்க்க முனைந்த நடவடிக்கையானது மிகுந்திருந்த அன்றைய காலகட்டத்தில் இது தவிர்க்க முடியாததாயினும், ஆரம்பத்தில் இருந்தே வலது சக்திகளை ஆதிக்கம் செலுத்த விட்டதும், ஸ்தாபனத்தை உடைக்கவும் நடவடிக்கையாக வலது சக்திகளால் சித்தரிக்கப்பட்டது. இதன் விளைவுகள் உட்கொலை தோழர்கள் உடல், உள ரீதியான பாதிப்புக்கள் ஆரோக்கியமான சக்திகளின் வெளியேற்றங்கள் என்பவற்றிற்கு ஸ்தாபனத்தை இட்டுச் சென்றது.

இத்தகைய ஆரோக்கியமற்ற நிகழ்ச்சிப் போக்கானது தாபனத்தை பல்வேறு பின்னடைவுகளிற்கும் அமைப்புக்கள் சிதைந்து, ஸ்தம்பிதம் அடைந்து போகும் நிலைக்கு வழி கோலியது. இத்தகைய ஒரு சூழ்நிலையில் 1986-ஆம் ஆண்டு பெப்ரவரி 19-ம் திகதி ஸ்தாபனத்தின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தளத்திற்கான மகாநாடு தமிழீழத்தில் கூட்டப்பட்டது. ஸ்தாபனத்தின் கடந்தகால தவறுகளை விமர்சித்து ஸ்தாபனத்தை மறுசீரமைப்பதை நோக்கமாகக் கொண்ட இம்மகாநாடு தனது நோக்கத்தை முழுமையாக நிறைவு செய்யாவிட்டாலும், தாபனத்தினுள் முதல்கட்ட வளர்ச்சிக்கான உட்கட்சிப் போராட்டமொன்றை நடாத்துவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்தது.

இதனையொட்டி ஸ்தாபனத்தின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பின்தளத்திற்கான மகாநாடு தமிழ்நாட்டில் 19-7-86ல் நடைபெற விருந்தது. தள மகாநாட்டைப் பொறுத்தவரையில் ஸ்தாபனத்தின் கடந்தகால தவறுகள் பலவற்றிற்கு மூல காரணமாக இருந்த ஆதிக்க சக்திகளில் சிலர் தங்களுடைய தவறுகளை ஸ்தாபனத்தின் மீது சுமத்தி விட்டு தப்பிக்கொண்டனர். ஆனால் தமிழ்நாட்டில் நடைபெற இருந்த மகாநாட்டில், ஸ்தாபனத்தின் தலைமை உட்பட கடந்தகாலத் தவறுக்காக விமர்சிக்கப்பட்ட பெரும்பான்மை அனைவரும் பின்தள மகாநாட்டில் பதில் சொல்ல வேண்டியிருந்தது. இம்மகாநாடு தீர்மானிக்கும் பட்சத்தில் விசாரணைகளையும் அதன்முடிவுகளையும் எதிர்நோக்க வேண்டியிருந்தது இத்தகைய சூழலில் தள மகாநாட்டில் ஸ்தாபன கடந்தகால தவறுகளுக்கு காரணமாக இருந்தது என்று காரணங்காட்டப்பட்ட மத்தியசபை உறுப்பினர்களில் சிலர் தொடர்ந்தும் தங்களது குறுங்குழுவாத நோக்கில் மகாநாட்டிற்கு முகம் கொடுக்க முடியாது தங்களது பலவீனத்திற்காக நியாயப்பூர்வமற்ற காரணங்களை முதன்மைப்படுத்தி மகாநாட்டை குழப்ப முயன்றதோடு குழுச் சேர்த்துக்கொண்டு ஸ்தாபனத்தை உடைக்கவும் முனைந்தனர். இத்தகைய ஒரு நெருக்கடியான சூழ்நிலையில் ஸ்தாபனத்தை நெருக்கடியில் இருந்து மீட்பதற்காக மகாநாட்டுப் பேராளர்களின்

படிப்பகம்

www.padippakam.com

வேண்டுகோளின்பேரில் 24-7-86 அன்று ஜனநாயகபூர்வமாக தேர்ந்தெடுக்கப்பட்ட 105 பேராளர்களுடன் மகாநாடு கூட்டப்பட்டது.

இம்மகாநாடு தன்னுடைய முழுமையான விமர்சனம், சுயவிமர்சனங்களின் பின்வரும் பிரகடனங்களை மக்களின் முன் வைக்கின்றது.

O ஸ்தாபனத்தை வழிநடத்த வேண்டிய சகல மட்டங்களிலிலிருமிருந்த முன்னணித் தோழர்களின் அனுபவ முதிர்ச்சியின்மையும், தேசியவாத குறுங்குழுவாத போக்கும் இப்பயங்கரவாதத்தின் எச்சசொச்ச தன்மையும்ஸ்தாபனத்தின் கடந்தகால தவறுகள் பலவற்றிற்கு காரணமாக இருந்திருக்கின்றது.

O வெகுஜன போராட்டத்தையும் ஆயுத போராட்டத்தையும் கருத்தியல் ரீதியாக ஒருங்கிணைக்க தவறியதால் அங்கு தோன்றிய அரசியல் இராணுவம் என்ற வேற்றுமை அமைப்புகளின் சிதைவிற்கும் அந்த இராணுவக் கண்ணோட்டத்திற்கும் வழி வகுத்திருக்கின்றது.

O ஸ்தாபனத்தின் சகல மட்டங்களிலும் தாபனத்தின் கருத்தியலை முதன்மைப்படுத்தி தோழர்களை அணிதிரட்டி வளர்க்கத் தவறியதே அவர்கள் மக்களுடனும் மாற்று விடுதலை இயக்கங்களுடனும் மேற்கொண்ட தவறான அணுமுறைகளுக்கு காரணமாக இருந்திருக்கின்றன.

O தமிழீழவிடுதலைப் போராட்டக் களத்திலுள்ள அனைத்து விடுதலை இயக்கங்களின் முலோபாயம் தந்திரோபாயமற்ற சுத்த இராணுவக் கண்ணோட்டப் போக்கும் அவற்றை மையப்படுத்த தவறிய நிலையில் போராட்டம் தொடர்பாக தந்திரோபாய அடிப்படையில் நாம் விட்ட தவறுகளும் மக்கள் மத்தியிலிருந்து நாம் அந்நியப்பட்டு போவதற்கும் எமது அமைப்புக்கள் சிதைந்து போவதற்கும் காரணமாக இருந்திருக்கின்றன.

O இறுதியாக இம்மகாநாட்டில் வைக்கப்பட்ட ஆரோக்கியமான விமர்சனங்களும், சுயவிமர்சனங்களும் தாபனத்தையும், தோழர்களையும் பலப்படுத்தி புதிய உத்வேகத்துடனும், புதிய அணுகுமுறைகளோடும் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு வழி சமைத்திருக்கின்றன. இது தமிழீழ போராட்ட வரலாற்றில் ஒரு திருப்பு முனையாகவும் ஏனைய இயக்கங்களுக்கு ஒரு முன் மாதிரியாகவும் அமைந்துள்ளது.

படிப்பகம்

www.padippakam.com

அனுபவ முதிர்ச்சியின்மை காரணமாகவும், பிற்போக்கு சக்தி-களின் அகப்புறத்தாக்கம் காரணமாகவும் நாம் போராட்டக் களத்திலேயே பல்வேறு தவறுகளை விட்டிருக்கின்றோம். தவறுகளுக்கு தத்துவார்த்த முலாம் பூசுவதன் மூலமோ அல்லது அவற்றை நியாயப்படுத்துவதன் மூலமோ எங்களை நாங்களே தூய்மை வாதியாக காட்டிக்கொள்ள நாங்கள் விரும்பவில்லை.

எங்களுடைய தவறுகளை நாம் ஏற்றுக்கொள்கிறோம். அதே சமயம் எங்கள் மீது சுமத்தப்பட்ட ஆதாரபூர்வமற்ற கீழ்த்தரமான குற்றச்சாட்டுக்களையும், ஆரோக்கியமற்ற விமர்சனங்களையும் நாம் நிராகரிக்கிறோம்.

எனவே, கடந்தகால தவறுகளிலிருந்து படிப்பினை பெற்று எதிர் காலத் தவறுகளை தவிர்த்து முன்னே செல்வதற்கு எமது மக்களையும், தோழர்களையும் ஆதரவு சக்திகளையும் எமக்கு வழிகாட்டிகளாகவும், உந்து சக்திகளாகவும் விளங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்

"எமது மக்களே எம்மை புரட்சியாளர்கள் ஆக்கியுள்ளனர்"

பின்தள தற்காலிக செயற்குழு,

**தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்**

படிப்பகம்